**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 24.09.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 13 (LW26)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A3, A4, A6, A7 ஆஜர். A1, A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் கமுதி ஆதிபராசக்தி நகரில் சிவசிவ என்ற பெயரில் ஆட்டோ மொபைல்ஸ் கடை நடத்தி வருகிறேன். TN 65 BZ 5035 என்ற பதிவெண் கொண்ட Splender Plus வாகனத்தை போலிசார் என்னிடம் கொண்டுவந்து, முன்பகுதி சேதம் அடைந்துள்ளதாகவும், அதனை வேலை செய்து கொடுக்கும்படி சொன்னார்கள். அதனை சரிசெய்து கொடுத்தேன். அதற்காக நான் வழங்கிய **சேத மதிப்புச்சான்றிதழ்** தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது தான். அது **அ.த.சா.ஆ.10** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:49:34 +0530

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் எப்போது எந்த வண்டியை வேலை செய்து கொடுக்கச்சொன்னாலும், நான் வேலை செய்து கொடுப்பேன் என்றால் சரிதான். வாகனத்தில் என்னென்ன சேதம் இருந்தது என்றால் Bumper, மக்காடு ஆகியவை சேதம் அடைந்திருந்தது. போலிசார் என்ன சொல்லி வேலைக்கு கொடுத்தார்கள் என்றால் விபத்து நடந்துவிட்டதாகவும், வேலை செய்து கொடுக்கும்படி சொல்லி வாகனத்தை கொடுத்தார்கள். மற்றபடி இந்த வழக்கு சம்மந்தமான வேறு விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:49:38 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .